بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 28/01/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 8**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ ـ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ـ

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது நற்குறிப்பு எடுத்துரைக்கப்பட்டு வருகிறது. இன்றும் அந்த குறிப்பே கூறப்படும். ஹம்ராஅல் அஸது போரைப் பற்றி எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சனிக்கிழமை அன்று உஹதிலிருந்து வந்தார்கள். அடுத்த நாளே விடியற்காலையில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் அவ்ஃப் முஸ்னி அவர்கள் குறைஷியர்களது மறு தாக்குதல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மற்றும் ஆயத்தம் ஆகியவற்றைக் குறித்து தகவல் தந்தார்கள். இதனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரிடம் ஆலோசித்த பிறகு எதிரிகளை எதிர்த்துப் புறப்பட தீர்மானித்தார்கள். மேலும் நம்முடன் முந்தைய போரில் பங்கு பெற்றவர்களே கலந்து கொள்வார்கள் என்ற அறிவிப்பையும் செய்வித்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தனது கொடியை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள் என்று வருகிறது. மற்றுமொரு அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். முஸ்லிம்களது இந்த படை மதீனாவிலிருந்து எட்டு மைல் தொலைவில் உள்ள ஹம்ராஅல் அஸது என்ற இடத்தை அடைந்தது. இணைவைப்பவர்கள் அச்சத்தால் மதீனாவை நோக்கி முன்னேறிவந்து போரிடும் எண்ணத்தை விட்டுவிட்டு திரும்ப மக்கா புறப்பட்டார்கள்.

பனு நளீர் போர் ஹிஜ்ரி நான்காம் ஆண்டு நடைபெற்றது. ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் 10 சஹாபிகளுடன் - அவர்களுள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அடங்குவார்; பனூ ஆமிரின் 2 கொலையுண்டவர்களுக்கான ஈட்டுத் தொகையை வசூல் செய்வதற்காக யூதர்களிடம் சென்றபோது அவர்கள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு உணவு வழங்கினார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் ஒரு சுவருடன் ஒட்டி அமர்ந்திருந்தார்கள். யூதர்கள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை கொன்று விடுவதற்கு இதைவிட சிறந்த சந்தர்ப்பம் கிடைக்காது என்று தங்களுக்குள் சதித்திட்டம் தீட்டினார்கள். அம்ர் பின் ஜிஹாஷ் என்பவன் அந்த வீட்டின் கூரையில் ஏறி அன்னார் மீது ஒரு பெரிய கல்லை விழ வைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டான். ஸலாம் பின் மிஷ்கம் என்ற பெயருடைய ஒரு யூத தலைவன் இந்த எண்ணத்தை விட்டுவிட ஆலோசனை வழங்கினான். மேலும், இது உடன்படிக்கையை மீறுவதாகும். நீங்கள் நினைப்பவை குறித்து அவர்களுக்கு நிச்சயம்

தெரிந்துவிடும் என்று கூறினான். எனவே அவ்வாறே நிகழ்ந்தது. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு விண்ணிலிருந்து இந்த சதி திட்டம் பற்றிய தகவல் கிடைத்து விட்டது. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் உடனடியாக தனது இடத்திலிருந்து எழுந்தார்கள். தம்மிடைய தோழர்களை அங்கேயே விட்டு விட்டு விரைவாக மதீனா சென்றடைந்தார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள், முஹம்மது பின் முஸ்லிமா அவர்களை பனு நஸீரிடம், ''நீங்கள் எனது நகரத்திலிருந்து வெளியேறுங்கள்; ஏனென்றால், நீங்கள் தீட்டிய திட்டம் நம்பிக்கை துரோகமாகும்'' என்ற தூதுச் செய்தியை அனுப்பினார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் யூதர்களுக்கு பத்து நாட்கள் அவகாசம் கொடுத்தார்கள். யூதர்கள் நிராகரித்து விட்டார்கள். நாங்கள் எங்களது நாட்டை விட்டு செல்ல மாட்டோம் என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் பனூ நஸீரின் கோட்டைகளை கடுமையாக முற்றுகையிட்டார்கள். அவர்களுக்கு உதவி செய்ய எவரும் வரவில்லை. இறைவன் யூதர்களது உள்ளத்தில் எத்தகைய திகில் உணர்வை இட்டான் என்றால், இறுதியில் அவர்கள் நாடு கடத்தப்படுவதற்கு தயாராகி விட்டார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அன்ஸார் பெருமக்களின் அனுமதியுடன் பனூ நதீர் போரிலிருந்து பெறப்பட்ட போர் செல்வங்களை முஹாஜிர்களிடத்தில் பிரித்துக் கொடுத்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அன்சாரின் ஜமாஅத்தே! அல்லாஹ் உங்களுக்கு நற்கூலி வழங்குவானாக என்று கூறினார்கள்.

பத்ருல் முஅய்யது போர் ஹிஜ்ரி நான்காம் ஆண்டின் சம்பவமாகும். அபூ ஸுஃப்யான் அவர்கள் உஹதிலிருந்து திரும்பி செல்லும் போது, அடுத்த வருடம் நமது சந்திப்பு பத்ருஸ்ஸஃப்ராவில் நடைபெறும். நாம் அங்கு போர் புரிவோம் என்று அறிவித்தார். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் அவர்களிடம், அவரிடம் இன்ஷா அல்லாஹ் என கூறுங்கள் என்றார்கள். பத்ர் மதீனாவிற்கு தென்மேற்கில் 150 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அறியாமைக் கால கட்டத்தில் அந்த இடத்தில் ஒவ்வொரு ஆண்டும் துல் கஅதா மாதத்தின் ஒன்றாம் தேதியிலிருந்து எட்டாம் தேதி வரை ஒரு பெரிய சந்தை நடைபெற்று வந்தது. அடுத்த வருடம் வாக்குறுதியின் காலம் அருகில் வந்ததும் அபூசுஃப்யான் எதிர்த்து போரிட தயங்கி அஞ்ச ஆரம்பித்தார். அவர்கள் முஸ்லிம்களுடன் போரிட மிகப் பெரும் படையை தயார் செய்கிறார்கள் என்ற விஷயத்தை அரேபியா முழுவதிலும் பிரகடனப்படுத்தினார். இதனால் முஸ்லிம்கள் அந்த ஆயத்தத்தின் செய்தி கேட்டு அஞ்சி போருக்கு வரக்கூடாது என்று விரும்பினார். ஓர் அறிவிப்பின் அடிப்படையில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோர் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். யா ரஸூலல்லாஹ்! அல்லாஹ் தனது மார்க்கத்தை வெற்றி பெறச் செய்வான்; தனது நபி (ஸல்) அவர்களுக்கு கண்ணியத்தை வழங்குவான். நாம் சமுதாயத்திடம் வாக்குறுதி கொடுத்துள்ளோம். அதற்கு மாற்றமாக நடப்பதை நாம் விரும்புவதில்லை. அதாவது, நிராகரிப்பாளர்கள் அதனை கோழைத்தனமாக கருதுவர். தாங்கள் வாக்குறுதிக்கு ஏற்ப செல்லுங்கள். இறைவன் மீது ஆணையாக! நிச்சயம் அதில் நன்மை இருக்கின்றது என்று கூறினார்கள். இந்த உத்வேகத்தை கண்டு ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் மிகவும் மகிழ்ந்தார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் 1500 சஹாபிகளுடன் பத்ரை

நோக்கி புறப்பட்டார்கள். ஆனால் அபூஸுஃப்யான் அவர்களோ படையுடன் அங்கு வரவில்லை. **ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹமது ஸாஹிப் (ரலி) கூறுகிறார்கள்:** இஸ்லாமியப் படை எட்டு நாட்கள் பத்ரில் முகாமிட்டது. அங்கு சஹாபிகள் சந்தையில் வியாபாரம் மேற்கொண்டு அதிக இலாபத்தை சம்பாதித்தார்கள். எந்த அளவுக்கென்றால், அவர்கள் தமது முதலீட்டை காட்டிலும் இரு மடங்கு அதிக இலாபம் ஈட்டினார்கள்.

பனூ முஸ்தலிக் போர் ஹிஜ்ரி ஐந்தாம் ஆண்டு நடைபெற்றது. பனூ முஸ்தலிக் போரின் மற்றுமொரு பெயர் முரைசீஃ போர் என்பதாகும். பனூ முஸ்தலிக் முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்க எண்ணுகிறது என்ற செய்தி ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு கிடைக்கப் பெற்ற போது, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் 700 சஹாபிகளுடன் படையெடுத்தார்கள். ஓர் அறிவிப்பின் அடிப்படையில் அந்த சந்தர்ப்பத்தில் முஹாஜிர்களது கொடி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் இருந்தது.

**அவதூறு கூறப்பட்ட சம்பவம்.** அதாவது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மகள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது நயவஞ்சகர்களால் அவதூறு கூறப்பட்ட சம்பவம் பனூ முஸ்தலிக் போரிலிருந்து திரும்பி வரும்போது நடந்தது. சஹீஹ் புகாரியில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களது அறிவிப்பின் அடிப்படையில் இந்தப் போரிலிருந்து திரும்பி வரும்போது, ஓர் இரவில் ஆயிஷா (ரலி) அவர்கள் இயற்கை உபாதையை கழிக்க சென்றார்கள். அன்னார் திரும்பி வந்தபோது தனது கற்கள் பதித்த மாலை தொலைந்து விட்டதை கண்டார்கள். அன்னார் மாலையை தேடிச் சென்றார்கள். திரும்பி வருகையில் படை புறப்பட்டு விட்டிருந்தது. படைக்கு பின்னே இருந்த ஸஃப்வான் பின் முஅத்தல் ஸக்வானீ அன்னாரை மிகவும் கண்ணியமாக ஒட்டகத்தில் ஏற்றி விட்டு படையுடன் வந்து சேர்ந்தார்கள். மதீனா வந்தடைந்ததும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) நோய்வாய்ப்பட்டார். அப்போது நயவஞ்சகர்களின் பல்வேறு விதமான பேச்சுகள் பரவியிருந்தன. தாம் இவ்வனைத்து விஷயங்களையும் தெரியாதவளாக இருந்தேன் என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) கூறுகிறார்கள். ஆனால் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களிடமிருந்து அந்த குறிப்பிட்ட கருணையை காணததன் காரணமாக அவ்விஷயம் என்னை நோய்வாய்பட்ட காலத்தில் நிம்மதி இழக்கச் செய்தது. இந்த விஷயம் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு தெரியவந்தபோது அன்னாரது நோய் மேலும் அதிகமானது. எனவே அன்னார், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுடைய அனுமதியுடன் தனது பெற்றோர் வீட்டுக்கு சென்று விட்டார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் உசாமா பின் ஸைத் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அலீ (ரலி) ஆகியோரிடம் இந்த விவகாரத்தை குறித்து ஆலோசனை கேட்டார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் நாள் முழுவதும் அழுதுகொண்டே இருந்தேன். எனது கண்ணீரும் ஓயவில்லை; எனக்கு தூக்கமும் வரவில்லை. ஒரு மாத காலம் இவ்வாறே கழிந்தது. பிறகு ஒருநாள் ஹஸ்ரத் ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆயிஷாவே! நீர் நிரபராதி என்றால் அல்லாஹ் நிச்சயமாக உமது தூய்மையை தெரிவிப்பான். ஒருவேளை உம்மிடமிருந்து ஏதேனும் தடுமாற்றம் ஏற்பட்டிருந்தால் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பை வேண்டுங்கள்; தவ்பா செய்யுங்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தனது பெற்றோர் அமைதியாக இருப்பதை கண்டு, இறைவன் மீது ஆணையாக! அந்த

விஷயம் உங்களது உள்ளங்களில் பதிந்து விட்டது என்று எனக்கு தெரிந்துவிட்டது. அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் எனது மற்றும் உங்களது உதாரணத்தை, فَصَبْرٌ جَمِيْلٌ ؕ وَاللّٰهُ الْمُسْتَعَانُ عَلٰى مَا تَصِفُوْنَ என்று கூறிய யூசுப் மற்றும் அவரது தந்தையுடனானதாக காண்கின்றேன். அதாவது, நன்கு பொறுமை கொள்வது எனக்கு உகந்ததாகும். மேலும் நீங்கள் எடுத்துரைக்கின்ற விஷயம் பற்றி தெரிந்து கொள்வதற்கு அல்லாஹ்விடம் உதவி கேட்டுப் பெறலாம் என்று கூறினார்கள். அதற்குப் பிறகு உடனடியாக ஹஸ்ரத் ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் மீது வஹி இறங்கியது. வஹியின் நிலை மாற ஆரம்பித்தபோது, ஹஸ்ரத் ரசூல் (ஸல்) அவர்கள் புன்முறுவல் பூத்தார்கள். ஹஸ்ரத் ரசூல் (ஸல்) அவர்கள், ஆயிஷாவே! அல்லாஹ்வை புகழுங்கள்; அவன் உங்களை தூய்மைப்படுத்தி விட்டான் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களது தாயார், ஆயிஷாவே! எழுந்து ஹஸ்ரத் ரசூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்கருகில் செல் என்று கூறினார்கள். ஆயிஷா (ரலி) அவர்கள், இல்லை! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு அருகில் செல்ல மாட்டேன். மேலும், அல்லாஹ்வை அன்றி வேறு எவரையும் புகழ்ந்துரைக்க மாட்டேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், மிஸ்தஹ் பின் உஸாஸா அவர்களுக்கு நெருங்கிய உறவினராக இருந்த காரணத்தினால் செலவுக்கு பணம் கொடுத்து வந்தார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களது பரிசுத்த தன்மை குறித்து அல்லாஹ் வஹி இறக்கியதும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மிஸ்தஹ் பின் உஸாஸா அவர்களுக்கு செலவுக்கு பணம் தர மாட்டேன் என்று சத்தியம் செய்தார்கள். அதற்கு அல்லாஹ் ''உங்களுள் வசதிபடைத்தவர், அருள் பெற்றவர் தங்களுக்கு நெருங்கியவர்களுக்கும், ஏழைகளுக்கும், அல்லாஹ்வின் வழியில் செலவு செய்பவர்களுக்கு எதையும் கொடுக்காமலிருக்க சத்தியம் செய்யாதீர்கள்'' என்ற வசனத்தை இறக்கினான். இந்த வசனம் இறங்கியதும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மிஸ்தஹ்வுக்கு மீண்டும் செலவு செய்ய ஆரம்பித்தார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** இறைவன் தனது நற்பண்புகளில் எச்சரிக்கை நிமித்தமான முன்னறிவிப்பை பாவமன்னிப்பு, தவ்பா, துஆ மற்றும் ஸதகாவால் விலக்கி வைக்கும் விஷயத்தை வைத்திருக்கின்றான். அதேபோன்று மனிதர்களுக்கும் அவன் இந்த நற்பண்புகளை கற்றுக் கொடுத்திருக்கின்றான். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் குறித்து நயவஞ்சகர்கள் தீய நோக்குடன் உண்மைக்கு புறம்பாக பரப்பிய அவதூறு பற்றிய குறிப்பில் சில சாதாரண இயல்புடைய சஹாபிகளும் இணைந்திருந்தார்கள் என்பது குர்ஆனிலிருந்தும் நபிமொழிகளிலிருந்தும் நிரூபணமாகிறது. ஒரு ஸஹாபி, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது வீட்டிலிருந்து இருவேளை ரொட்டி உண்டு வந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அவருடைய இந்த தவற்றின் காரணமாக எச்சரிக்கை செய்யும் விதமாக இந்த வீணான செயலுக்கு தண்டனையாக தாம் அவருக்கு ஒருபோதும் உணவு வழங்க மாட்டேன் என்று சத்தியம் செய்தார்கள். அப்போது இந்த வசனம் இறங்கியது; (அதாவது, அவர்கள் மன்னித்து பொறுத்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ் உங்களது தவறுகளை மன்னிப்பதை நீங்கள் விரும்புவதில்லையா? அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மீண்டும் மீண்டும் கருணை

புரிபவனும் ஆவான்) அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தனது அந்த சத்தியத்தை முறித்து விட்டார்கள். வழக்கம்போல் உணவு வழங்கினார்கள். **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** எச்சரிக்கை நிமித்தமாக ஏதேனும் உறுதிமொழி எடுக்கப்பட்டால் அதனை முறிப்பது நல்லொழுக்கத்தை சார்ந்ததாகும் என்பது இதன் அடிப்படையில் இஸ்லாமிய நல்லொழுக்கத்தில் உள்ள விஷயமாகும். உதாரணமாக, ஒருவர் தனது ஊழியருக்கு நிச்சயம் 50 செருப்படி கொடுப்பேன் என்று உறுதிகொள்கிறார். அந்த ஊழியர் தவ்பா செய்வதனால், மன்றாடுவதனால் அவரை மன்னித்து விடுவது இஸ்லாம் ஆகும். இதன் மூலம் அல்லாஹ்வின் பண்புகளை பேணுவதாக அது ஆகிவிடும். ஆனால் வாக்குறுதியை மீறுவது என்பது ஆகுமானதன்று. வாக்குறுதியை மீறுவதால் அதற்கு பதில் அளிக்க வேண்டி இருக்கும். ஆனால் எச்சரிக்கை நிமித்தமான சத்தியத்தை மீறுவதற்கு பதில் அளிக்க வேண்டி இருக்காது.

மக்கத்து குறைஷிகள் மற்றும் முஸ்லிம்களுக்கு இடையில் நடைபெற்ற மூன்றாவது பெரிய போரான அஹ்ஸாப், ஷவ்வால் மாதத்தில் ஐந்தாம் ஹிஜ்ரியில் நடைபெற்றது. பனூ நதீரின் யூதர்கள் நாடு கடத்தப்பட்டதற்குப் பிறகு அவர்கள் ஹைபர் சென்றடைந்தார்கள். அங்கு சென்று அவர்கள் மக்கத்து குறைஷிகள் மற்றும் இதர அரேபிய கோத்திரங்களுடன் உடன்படிக்கை செய்து பத்தாயிரம் வீரர்களைக் கொண்ட படையைத் தயார் செய்தார்கள். இந்த செய்தி ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு கிடைத்ததும் அன்னார் ஆலோசனைக் கூட்டம் கூட்டினார்கள். ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்களது ஆலோசனையின் அடிப்படையில் மதீனாவின் வடக்கு திசையிலிருந்த திறந்தவெளி பகுதியில் ஆறு நாட்களில் சுமார் மூன்றரை மைல் நீளத்திற்கு அகழ் வெட்டப்பட்டது. அகழ் தோண்டுவதில் எந்த முஸ்லிமும் பின் தங்கவில்லை. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோருக்கு மண் எடுத்துச் செல்ல கூடைகள் கிடைக்காமல் போனால் உடனே தங்களது ஆடைகளில் மண்ணைச் சுமந்து செல்வார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முஸ்லிம்களின் ஒரு படைப்பிரிவை வழி நடத்தினார்கள். பிறகு அந்த இடத்தில் ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டது. அது மஸ்ஜிதே ஸித்தீக் என்று அழைக்கப்பட்டது.

*ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய நற்குறிப்பு இனிவரும் காலங்களில் எடுத்துரைக்கப்படும் என்று கூறிய பிறகு ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹுத்தஆலா அவர்கள், மதிப்பிற்குரிய முக்தார் அஹ்மது கோந்தல் ஸாகிபின் மனைவி மதிப்பிற்குரிய முபாரகா பேகம் ஸாஹிபா, மதிப்பிற்குரிய மீர் அப்துல் வஹீது ஸாஹிப் மற்றும் அமெரிக்காவைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஸய்யிது வகார் அஹ்மது ஸாஹிப் ஆகியோரின் நற்குறிப்பை எடுத்துரைத்து ஜனாஸா தொழுகை தொழுவதற்கான அறிவிப்பை செய்தார்கள். ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹ் அவர்கள் மர்ஹூம்களின் பாவமன்னிப்பு மற்றும் உயர்ந்த அந்தஸ்திற்காக துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهُ وَنَسْتَعِيْنُهُ وَنَسْتَغْفِرُهُ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّـَٔاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)**